கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

**அசல் வழக்கு எண். 224/2021**

**வா.சா.1 – வேலுசாமி**

24–07–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனது இடத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்வதால் அது குறித்து பரிகாரம் கோரியுள்ளேன். தாவா சொத்து எனது அப்பாவின் தாயார் செல்லம்மாளின் சொத்து. தாவா சொத்து தாத்தா இருக்கும்போது கரார் செய்யப்பட்டது. மீண்டும் எனது அப்பா காலத்திலும் கரார் செய்யப்பட்டது. எந்த தேதியில் கரார் செய்யபபட்டது என்பதை பத்திரத்தை பார்க்கவேண்டும். கரார் செய்ததாக சொல்லும் நான் செக்குபந்தி என்ன என்றால் செக்குபந்தி எதுவும் போடவில்லை, கல் நடப்படவில்லை. எனது தாத்தாக காலத்திலேயே பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு 58 செண்டில் 47 செண்ட் சொத்து விற்கப்பட்டது.

2. 47 செண்ட் பொதுவில் விற்கப்பட்டதா என்றால் தொண்டுபட்டி இடம் போக பாக்கி இடம் விற்கப்பட்டதாக பத்திரத்தில் உள்ளது. மேற்படி கிரையப்பத்திரத்தை தாவாவில் சேர்த்துள்ளேன். தாவா சொத்தில் பொதுவில் 47 செண்டை விற்பனை செய்துவிட்டு தவறான செக்குபந்தி குறிப்பிட்டு தவறான தாவா சொத்தி குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவர்கள் கிரையம் செய்து கொடுத்த பத்திரத்தில் தொண்டுபட்டிக்கு வடக்கே என்று குறிப்பிட்டுள்ளோம்.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.